**Praise the Lord:**

இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?
How good and pleasant it is when brothers live together in unity! (NIV) (ps. 133:1)
Brethren (KJV) God's people (GNB)

அப்படி ஒன்றுகூடும்போது . . . அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதமும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்... . .என்று வேதம் சொல்கிறது. அப்படியே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

ஆனாலும் சில நேரங்களிலே ஏன் கவலையும் சோர்வும் உள்ள சூழ்நிலை சகோதரர் ஒருமித்து வாசம் செய்யும் இடத்தில் உள்ளது?. . .என நான் சிந்தித்து, ஜெபிக்கிறதுண்டு. . . .

நான் இந்த குறுகிய நாட்கள் இந்தியா சென்று வந்த நாட்களில் அங்குள்ள ஒவ்வொரு நாட்களையும் நான் பழகிய மக்களையும் அந்த சூழ்நிலைகளையும் இப்போ நான் ஆராய்ந்து பார்க்கும்போது, மிகவும் ஒரு ஆச்சரியமாக உள்ளது. அங்குமட்டுமல்ல இந்த உலகத்தில் எங்கு சென்றாலும் வாழ்க்கையை சிந்திக்கும்போது ஆச்சரியமாக விசித்திரமாகவும் உள்ளது.
மக்களை 2 பெரிய பிரிவாக பிரித்து இன்று சிந்தித்து பார்ப்போம்.

1. கிறிஸ்தவர்கள் 2. கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள்.

*(அதற்குள்ளே உள்ள பல உட்பிரிவுகளைப்பற்றி நாம் இப்போ விடுவோம்.. . .. .*

கிறிஸ்தவர்களில். . .

ஒரு சில நடத்தைகள் கிறிஸ்துவின் சாட்சியாக இருந்தது, அது என்னை உற்சாகப்படுத்தியது.
ஒருசில நடத்தைகள் எனக்கு மிகவும் விசித்திரமாகவும் கவலையாகவும் இருந்தது,
சில சமயங்களில் அவர்கள் கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவுக்குள் வாழ்பவர் என்று மற்றவர்களுக்கு சொல்லக்கூட ஒரு பெரிய இடையூறாக கண்டேன்.

கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களில்,

ஒருசில கிறிஸ்துவின் பண்பை காணும்பொழுது, அது என்னை உற்சாகப்படுத்தியது.
ஒருசில கிறிஸ்துவின் மாறான பண்பை காணும்போது, அது எனக்குக் கவலையைக் கொடுத்தாலும், அவர்களுக்காக ஜெபித்து அதன்மூலம் ஒரு ஆறுதலும் கிடைத்தது.

இது அங்குமட்டுமல்ல, எங்குமுள்ள சூழ்நிலைதான். . .
இந்த சூழ்நிலை நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறது என்பதை நாம் உணரலாம்.
பிறர் இப்படி இருக்கிறார்களே என்று நாம் அவர்கள் காரியத்தில் கண்ணோட்டமிடுவதோடு. . . .
முதலில் முக்கியமாக நம்மை நாமே கண்ணோட்டமிடுவது நல்லது. .

*எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து. . .* ***A man ought to examine himself (1 cor. 11:28)***
*நம்மை நாமே நிதானித்து அறிந்தால். ..* ***if we judged(examine) ourselves NIV(NLT) (1 cor. 11:31)***
*நாம் நியாயந்தீர்க்கப்படோம். . .ஆமென்.*

மாம்சத்திலே நமக்கு ஏற்படும் எண்ணங்கள் நம்மை கிறிஸ்துவின் சிந்தையினின்று பிரிக்கப்பார்க்கும்பொழுதெல்லாம். .. .. . .இந்த ஜீவனுள்ள வசனம் இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், இருந்து அந்த மாம்ச சிந்தையை நம்மிலிருந்து பிரித்தெடுக்குமென்று வேதம் சொல்கிறது. ஆனால் பல நேரங்களில் நான் அப்படி இல்லாத ஒரு சூழ்நிலையை பார்க்கும்போது மிகவும் வேதனையாக இருக்கும்.

ஏதோ ஒரு வகையில் இந்த உலகத்தின் பற்றுதல்கள் நம்மை அப்படி ஆட்டிப்படைக்கிறதோ என தோன்றுகிறது.

பற்று இல்லாதவரான இறைவனது பற்றினை மட்டுமே பற்றுக. உலகப் பற்றுகளை விடுவதற்காக, **அதனையே எப்போதும் விடாமல் பற்றிக் கொள்க**. (குறள் 350)
உலகத்தின் பற்றுகளை விடுவதற்காக கடவுளைப் பற்றுங்கள் என்று குறள் சொல்கிறது. ஆனால் இன்று உலக பற்றுதலுக்காகவேதான் கடவுளைப்பற்றிக் கொண்டிருக்கிறார்கள் பலர்.

நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல என்று சொன்ன இயேசுவை அறியாதவர்கள் உலகத்தின் பற்றுகளில் இருப்பது ஒருபுறம். . ., ஆனால் இயேசுகிறிஸ்துவுக்குள் வாழ்கிறோம் என்று சொல்கிறவர்கள்கூட பலர் உலகத்தின் பற்றுகளில் பிடிபட்டு இருக்கிறார்கள்.
உலகத்தின் பற்றுதல் அவ்வளவு வல்லமையான பட்டயமாக நம்மை ஆட்கொள்ள வந்தாலும், அதைவிட கருக்குள்ள பட்டயம் ஜீவனுள்ள வசனம் நம்மிடம் இருப்பதை நாம் உபயோகித்தால் அந்த பற்றுதலிலிருந்து விடுபடலாம்.
ஆமென்.

**Let us pray……..for these words**

எபிரெயர்/Hebrews 4:12 (பக்கம் 301)

தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், **இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும்,** ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.
For the word of God is living and active. Sharper than any double-edged sword, it penetrates even to dividing soul and spirit, joints and marrow; it judges the thoughts and attitudes of the heart. (NIV)

sharper than the sharpest two-edged sword (NLT)
and sharper than any twoedged sword (KJV)

ஜீவனும் வல்லமையும் உள்ள வார்த்தை, இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயுள்ள வார்த்தை. . .. . .. ..கிறிஸ்துவுக்குள் வாழும் நமக்குள் வாசம் செய்தால், அது நிச்சயமாக நமது **ஆத்துமாவையும் மாம்சத்தையும்** பிரித்து பக்குவப்படுத்த வல்லமையுள்ளது. ஆமென்.

"It makes a soul that has long been proud, to be humble; and a perverse spirit, to be meek and obedient. Sinful habits, that are become as it were natural to the soul, and rooted deeply in it, are separated and cut off by this sword." *(Matthew Henry's Concise Commentary)*

*அப்படி பிரிக்குமானால் கடந்த வேதப்படிப்பிலே படித்ததுபோல*
*இந்த உலகமும் மாம்சமும் அற்பமானது என்பதை நாம் நிச்சயமாக உணரமுடியும். . .*

இருந்தும் நமது நடத்தைகள் கிறிஸ்துவுக்கு மாறானதாக இருக்குமானால் . . . . ..
ஒன்று வசனம் நமக்குத் தெரியாமல் இருக்கும்போது அது பிரித்து பக்குவப்படுத்துவதை உணரமுடியாமல் இருக்கலாம். (வசனமே தெரியவில்லையென்றால். . .??)
வசனம் தெரிந்தாலும் அதை நாம் எடுத்துக்கொள்ளாத அளவுக்கு நமது உலகப்பற்றுக்கள் நம்மை ஆட்கொள்ளும்போதும் அல்லது தெய்வபயம் இல்லாதபோதும், அது பிரித்துப் பக்குவப்படுத்துவதை உணரமுடியாமல் இருக்கலாம்.. அல்லது அந்த உணர்தலை செயல்படுத்தமுடியாமல் இருக்கலாம்.

எபிரெயர்/Hebrews 4:13 (பக்கம் 301)

அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்குமுன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்..
Nothing in all creation is hidden from God's sight. Everything is uncovered and laid bare before the eyes of him to whom we must give account.

அவருக்கு கணக்கு ஒப்படைக்கவேண்டும் என்ற பயம் நமக்கு இருந்தால். ..
நாம் கணக்கை சரியாக வைத்திருக்கவேண்டுமென்ற எண்ணமும் நமக்கு இருக்கும்.

இந்த வசனம் நம்மிடம் எப்பொழுதும் இருக்குமானால், இது நம்மை ஆட்கொள்ளும் உலகப்பற்றுக்களை மேற்கொண்டுவிடும். ஆமென்.
**அதனையே எப்போதும் விடாமல் பற்றிக் கொள்க.** (குறள் 350)
*எப்பொழுதும் வசனத்தை விடாமல் பிடித்துக் கொண்டால். . . .நாம் பிழைப்போம். ஆமென்.*

பலநேரங்களிலே நாம் வசனத்தை பிடிக்காமால் போய்விடுகிறோமோ. .. அதனால்தானோ இந்த உலக காரியங்கள் நம்மை மேற்கொள்கிறது எனத் தோணுகிறது.

எபேசியர்/Ephesians 6:17 (பக்கம் 269)

இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.

Take the helmet of salvation and the sword of the Spirit, which is the word of God. (NIV)

இப்படி கிருபையால் கிடைத்த இரட்சிப்பையும் வல்லமையான வார்த்தையையும் பல கிறிஸ்தவர்கள் வீட்டிலேயே வைத்துவிட்டு வெளியிலே உலகத்திலே சுற்றிவருவதுபோல எனக்கு தோண்றுகிறது ..

*(Driving Motor bike without Helmet and without proper instruction learned. . ..!!!??? )*

எப்பொழுதும் விடாமல் கர்த்தரை பற்றிக்கொள்ள கர்த்தரை வேண்டுவோம். ஆமென்.

கடந்த சனிக்கிழமை ஆராதனை தேவசெய்தியில் கேட்டபடி. ..

சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும், . . . .(**கொலோசெயர்** 1:10)

And we pray this in order that you may live a life worthy of the Lord and may please him in every way: bearing fruit in every good work, growing in the knowledge of God, (NIV)

இப்படி இருக்கவேண்டும் என்ற ஆவலுடன் அவர் கொடுத்த இரட்சிப்புடனும் இந்த வேதத்தை வாசிக்க வாசிக்க நமக்குள்ளே உள்ள சிநதைகளை நிச்சயமாக இந்த வசனம் பிரித்து நம்மை பக்குவப்படுத்தும்.

நான் வாசிக்க வாசிக்க. . ..ஆண்டவரே இன்னும் எவ்வளவோ காரியங்களில் உமக்கு பிரியமுண்டாக நான் பாத்திரராய் ஆகவில்லையே என்று ஏக்கமும் அந்த வாஞ்சையும் உண்டாகிறது.

அதற்கு நாம் வேறு எந்த உதவிகளையும் நாடமுடியாது. அவரையே பற்றிப் பிடித்துக் கொண்டால் அவர் நம்மை எல்லாத்தீங்குக்கும் விடுவில்ல வல்லவராயிருக்கிறார். ஆமென்.

உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன்.

If your law had not been my delight, I would have perished in my affliction.

நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, . . . .

Because of the LORD's great love we are not consumed, for his compassions never fail.

> கர்த்தர் எனக்குத் துணையாயிராவிட்டால், என் ஆத்துமா சீக்கிரமாய் மவுனத்தில் வாசம்பண்ணியிருக்கும்.
>
> என் கால் சறுக்குகிறது என்று நான் சொல்லும்போது, கர்த்தாவே, உமது கிருபை என்னைத் தாங்குகிறது.
>
> என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில், உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறது.
>
> Unless the LORD had given me help, I would soon have dwelt in the silence of death.
>
> When I said, "My foot is slipping," your love, O LORD, supported me.
>
> When anxiety was great within me, your consolation brought joy to my soul.

இப்படியே அவருடைய வசனத்தின் ஜீவனை சொல்லிக்கொண்டே போகலாம். . ..

**கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன பாக்கியவான். (சங்கீதம்)**

எனது பைபிளில் ஒருசில வசனங்களை highlight பண்ணிவைத்திருக்கிறேன்.

அப்படி உள்ளதை just ஒவ்வொரு அதிகாரமாக புதிய ஏற்பாட்டிலே எடுத்து ஒவ்வொரு வசனத்தை சுறுக்கமாக இங்கு வாசிக்கிறேன். நீங்கள் எடுத்து வாசிக்கவேண்டாம். just கேளுங்கள்.. .. .

> என்னித்தில் கற்றுக்கொள்ளுங்கள் (மத். 11:29)
>
> Learn from me…..(mat. 11:29)

முழுஇருதயத்தோடு . . அன்புகூறுவாயாக (மாற்கு 12:30)

Love the Lord with all your heart……(Mark 12:30)

சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும் (லூக்கா 18:1)
…they should always pray….(Luke 18:1)
வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். .(யோவான் 5:39)
..you diligently study the scriptures…..(John 5:39)
பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சியாயிருப்பீர்கள். . (அப். 1:8)
…you will be my witnesses….to the ends of the earth…(Acts 1:8)
உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள். . (ரோமர் 12:12)
…patient in affliction…(Romans 12:12)
நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் (1 கொரி.3:16)
..you yourselves are God's temple (1 Cor. 3:16)
எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது. . (2 கொரி. 3:5 )
Our competence comes from God. (2 Cor. 3:5)
அன்பினாலே கிரியை செய்கிற விசுவாசமே உதவும் (கலா. 5:6)
The only thing that counts is faith expressing itself through love. (Gal. 5:6)
நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். (எபே. 5:16)
making the most of every opportunity, because the days are evil. (Ephe. 5:16)
எந்த நிலைமையிலும் மனரம்மியமாக இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள். (பிலி. 4:11)
I have learned to be content whatever the circumstances.(Phil. 4:11)
பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள் (கொலோ. 3:2)
Set your minds on things above, not on earthly things. (Colo. 3:2)
இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் (1 தெச.5:17)
Pray continually (1 Thess. 5:17)
நன்மை செய்வதிலே சோர்ந்துபோகாமலிருங்கள் (2 தெச. 3:13)
never tire of doing what is right. (2 Thess. 3:13)
விசுவாசிகளுக்கு மாதிரியாயிருங்கள் (1 தீமோ. 4:12)
set an example for the believers..(1 Tim. 4:12)
உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிருங்கள் (2 தீமோ. 2:15)
Do your best to present yourself to God as one approved..(2 Tim. 2:15)
நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பி. . (தீத்து 2:7)
In everything set them an example by doing what is good. (Titus 2:7)
உம்முடைய விசுவாசத்தின் அந்நியோந்நியம் கிறிஸ்து இயேசுவுக்காய் பயன்படவேண்டும் (பிலே.1:6)
..you will have a full understanding of every good thing we have in Christ. (Phil.1:6)
இயேசுவை நோக்கி. . ஓட்டத்திலே பொறுமையோடு ஓடக்கடவோம். (எபி. 12:1)
Let us run with perseverance….Let us fix our eyes on Jesus. (Heb. 12:1)
கர்த்தருக்கு முன்பாக தாழ்மைப்படுங்கள். . (யாக். 4:10)
Humble yourselves before the Lord. (James 4:10)
முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள் (1 பேதுரு 4:9)
Offer hospitality to one another without grumbling. (1 Peter 4:9)
சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணும்படி ஜாக்கிரதையாயிருங்கள் (2 பேதுரு 3:14)
make every effort to be found spotless, blameless and at peace with him. (2 Peter 3:14)
அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான்.( 1 யோ. 2:4)
The man who says, "I know him,"but does not do what he commands is a liar. (1 John 2:4)
கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன் (2 யோ 9)
whoever continues in the teaching has both the Father and the Son. (2 John 9)
தீமைசெய்கிறவன் தேவனைக் காணவில்லை (3 யோ. 11)
Anyone who does what is evil has not seen God. (3 John 11)
இயேசுகிறிஸ்துவின் இரக்கத்தைப் பெற காத்திருங்கள் (யூதா 21)
..wait for the mercy of our Lord Jesus Christ. (Jude 21)

நீ மரணபரியந்தம் உண்மையாயிரு (வெளி.2:10)

Be faithful, even to the point of death. (Rev. 2:10)

மத்தேயு முதல் வெளிப்படத்தின விசேஷம் வரை ஒவ்வொரு வசனம் வாசித்தேன்.

இந்த வசனங்களை நான் கடைபிடிக்கிறேனா என்று என்னை நானே நிதானித்துப் பார்த்தால். . . .ஆண்டவரே நான் இன்னும் உமக்குள் பெலப்பட, பரிசுத்தப்பட கிருபைதாரும் என்றுதான் வேண்டுகிறேன். சிந்தியுங்கள்.

இந்த வசத்தின்படி நடக்க நாம் நம்மை ஒவ்வொரு நாளும் தயார்படுத்தி பிரயாசப்பட்டால், பிரயாசப்பட்டுப் பயிரிடுகிறவன் பலனில் முந்திப் பங்கடையவேண்டும். (2 தீமோ. 2: 6) என்ற வசனத்தின்படி, நாம் கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம். ஆமென்.

மத்தேயு 19வது அதிகாரத்திலே ஐசுவரியவான் சம்பவத்தில். . .. கடவுள் கற்பனைகளை சிறுவயதிலிருந்தே கைகொண்டுவந்த ஒரு ஐசுவரியவான் இந்த உலக பற்றுதலினால் இயேசு சொன்ன கட்டளைக்கு கீழ்படியாமல் போய்விட்டார். அந்த அளவிற்கு உலகப்பற்று வல்லமை உள்ளது.
ஆனால் நமது ஜீவனுள்ள வசனம் அதைவிட கருக்கான பட்டயம்.. .. அதை ஏன்அந்த ஐசுவரியவான் எடுத்துப் பாவிக்க முடியாமல் போய்விட்டது? சிந்திப்போம். பிரயாசப்படுவோம். ஆமென்.

Rich man. ஐசுவரியவான் பணக்காரன் என்றால் ஏதோ பெரிய பணக்காரன் . .. .அது நமக்கில்லை என தயவுசெய்து நினைக்காதீர்கள். . .
ஒரு வீட்டில் சாதாரண வேலை செய்யும் ஒருவரைப் பார்க்கும்போது நான் பணக்காரன். ஒரு company General Managerஐ அல்லது ஒரு பெரிய அதிகாரியை பார்க்கும்போது அவர் பணக்காரர், நான் ஒரு சாதாரணமானவன். . . . . நம்மை ஒப்பிட்டு பார்க்கும் சூழ்நிலையைப் பொறுத்தது. .. . ..

வீட்டிலே ஒன்றுமில்லாமல் இருக்கும்போது,
இன்று என்ன **சமையல் செய்கிறது?** என்று கேட்கிறதையும் கவனித்திருக்கிறேன்.
வீட்டிலே அளவுக்கு மிஞ்சி பலவகையான பொருட்கள் இருக்கும்போதும்,
இன்று என்ன **சமையல் செய்கிறது?** என்று கேட்கிறதையும் கவனித்திருக்கிறேன்.
கேள்வி ஒன்று, சூழ்நிலைகள் வித்தியாசம். . . . சிந்தித்துப் பாருங்கள்.

1 தீமோத்தேயு/1 Timothy 6:8 (பக்கம் 290)

உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம்

But if we have food and clothing, we will be content with that. (NIV)

இந்த வசனத்தின் கருத்துக்கு மேலாக விரும்பும் ஒவ்வொருவரும் ஐசுவரியவான்கள்தான்.
அமைதியாக உட்கார்ந்து சிந்தித்துப்பாருங்கள்.
ஐசுவரியவான் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன் என்றவர் . . .
மனுஷரால் இது கூடாததுதான்; தேவனாலே **எல்லாம்** கூடும் என்றும் சொன்னார்.
அவரையே எப்பொழுதும் பற்றிப்படித்துக் கொண்டு பொறுமையோடு ஓடுவோமாக. ஆமென்.

மற்றவர்கள் சாட்சி நீதியாக இருந்தால், அதை பிடித்துக் கொண்டு உற்சாகப்படுங்கள். அவர்களுடைய சாட்சி அநீதியாக இருந்தால் அதை விட்டுவிடுங்கள். அவருக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். அவராலே அந்த சாட்சியினாலே சோர்ந்துபோகாதீர்கள். தவறிப்போகாதீர்கள். வாயின் வார்த்தைகளை தவறவிடாதீர்கள்.
அவர் சாட்சிக்கு அவர்தான் கர்த்தருக்கு கணக்கு கொடுப்பார்.
ஆனால் அதானாலே நாம் தவறினால் நம் தவறுதலுக்கு நாம்தான் கணக்கு கொடுக்கவேண்டும். சிந்தித்துப் பாருங்கள்.

**ஜீவனுள்ள சாட்சியை, வேதத்தை எப்பொழுதும் பிடித்துக் கொள்வோமானால் அது நம்மை எல்லா இக்கட்டுகளிலிருந்தும் பிழைக்கவைக்கும். ஆமென்.**

சங்கீதம்/Psalm 119:144 (பக்கம் 750)

உம்முடைய சாட்சிகளின் நீதி என்றைக்கும் நிற்கும்; என்னை உணர்வுள்ளவனாக்கும், அப்பொழுது நான் பிழைத்திருப்பேன்.

The righteousness of thy testimonies is everlasting: give me understanding, and I shall live. (KJV)

**நம்மை உணர்வுள்ளவனாக்கி, பிழைக்கவைக்கும் எந்தப் பட்டயத்திலும் கருக்குள்ள பட்டயம்.**
**சத்தியமும் கிருபையும் நிறைந்தவராய் அவர் நமது இருதயத்திலே எப்பொழுதும் இருக்கும்பொழுது, இந்த உலகப்பற்றுதல்கள் நம்மை ஒருபோதும் ஆட்கொள்ளமுடியாது. ஆமென்.**

**இந்த உலகப்பற்றுதல்களில் உலன்றுகொண்டிருக்கும் மக்களையும் நாம் கிறிஸ்துவுக்குள் கொண்டுவர கர்த்தர் நம்மோடு இருந்து செயல்படுவாராக. ஆமென்.**

*தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்,. என்றபடி இந்த வார்த்தைகள் நம் ஒவ்வொருவருக்கும் இன்னும்பல சிந்தனைகளை கொண்டுவந்து ஆசீர்வாதமாக அமையவும்,*
*நம்முடைய வாயின் வார்த்தைகளுக்கும் செய்கைகளுக்கும் கர்த்தருக்கு பதில் சொல்லவேண்டும் என்ற தேவபயமும் நம் ஒவ்வொருவரையும் ஆட்கொள்ள கர்த்தரை வேண்டுகிறேன்..*
*ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை.. . என்ற வசனத்தின்படி நாம் மரணத்தையும் இந்த உலகத்தையும் ஜெயித்தவர்களாக வாழுவோம். ஆமென்.*